**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 81 /2017 P.W.1/ LW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **செல்வராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.06.2022.**

**முதல் விசாரணை :**

1) நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு தெரியும். அவர் எனது கொல்லைக்கு பக்கத்தில் உள்ளார். கடந்த 05.04.2017 அன்று சுமார் 4.00 மணியளவில் நானும் எனது தம்பி ராஜேந்திரனும் சிங்கங்குளத்தில் உள்ள எங்களது வயலில் நடவு நட்டுக்கொண்டிருந்தோம், அப்போது எங்கள் மரத்தில் இருந்து தேங்காய் விழுந்தது அதனை ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சதீஸ் எடுத்தார் . அப்போது எனது அப்பா ஏன் தேங்காயை எடுக்கிறாய் என்று கேட்டதற்கு எனது அப்பாவை கெட்ட வார்த்தை சொல்லி பேசிவிட்டு கன்னத்தில் அறைந்து விட்டார். அதைப்பார்த்த எனது தம்பி ராஜேந்திரன் சத்தம் போட்டு ஓடி வந்தார், நானும் ஓடி வந்தேன். எங்களையும் கெட்ட வார்த்தை சொல்லி பேசிவிட்டு ரீப்பர் கட்டையால் அடித்து எனது இடது கையை உடைத்து விட்டார். **( சாட்சி தனது இடது கையை காண்பித்து சொல்கிறார். அதில் ஆப்பரேசன் செய்து பிளேட் வைக்கப்பட்டுள்ளது. )** எனது தம்பி ராஜேந்திரன் தடுக்க வந்தபோது அவரையும் இடது பக்க காது பக்கத்தில் தலைப்பகுதியில் அடித்தார் அதில் அவருக்கும் காயம் ஏற்பட்டது.

2) பின்னர் எங்களை பார்த்து சாகும்வரை உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று ஆபாசமான வார்த்தையால் குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டினார். பின்னர் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேகர் என்பவர் சேர்த்தார். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். (**மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆத. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை :_ குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் _.**

**1)** நான் பி.யு.சி வரை படித்துள்ளேன். எனக்கு 1 க்கும் 2 க்கும் வித்யாசம் தெரியும். ஆணுக்கும், பெண்ணுக்கும் வித்யாசம் தெரியும். நான் மருத்துவரிடம் சிகிச்சைக்காக செல்லும்போது இரண்டு பேர் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அதே போல் ஆண் ஒன்றும், பெண் ஒன்றும் தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2) ரீப்பர் என்றால் என்னவென்று எனக்கு தெரியும். ரீப்பர் என்றால் அளவு வாரியாக அறுத்து வைக்கப்பட்டிருக்கும் சட்டம் என்றால் சரிதான். கழி என்று உருட்டுக்கட்டையை சொல்வோம். சிங்காங்குளத்தில் இருந்து மன்னார்குடி காவல்நிலையம் சுமார் 2. 1/2 கிமீ தொலை என்றால் சரிதான். நான் மன்னார்குடி காவல்நிலையம் வரவேண்டும் என்றால் ஒரு 1/2 மணி நேரத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான். அதேபோல் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றால் 20 நிமிடத்தில் வந்த விடலாம் என்றால் சரிதான்.

3) சம்பவம் நடந்த அன்று மாலை 5 மணிக்கு ஆய்வாளர் கழனியப்பனை நானும் எனது சகோதரர் ராஜேந்திரனும் சந்தித்தோம் என்றால் சரிதான். ( **சாட்சி மீண்டும் மாற்றி சொல்கிறார் , என்னை ஆஸ்பத்திரியில் வைத்துதான் விசாரித்தார். )** நாங்கள் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் சுமார் 7 மணிக்கு வந்தோம். மேற்படி மருத்துவமனையில் புறக்காவல்நிலையம் இருக்கிறது என்றால் சரிதான்.

4) மேற்படி புறக்காவல்நிலைய ே பாலீசார் நடந்த விவரத்தை என்னிடம் கேட்டார்கள்ள ன்றால் சரிதான். அவ்வாறு கேட்கும்போது 7.30 மணி என்றால் சரிதான். நான் நடந்த்தையெல்லாம் சொன்னேன் என்றால் சரிதான். அவர்கள் அதை எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதேபோலவே எனது சகோதரர் ராஜேந்திரனிடமும் கேட்டார்கள் அவர் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். ராஜேந்திரனிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

5) நான் ஒருபோதும் கட்டைக்கழியால் தாக்கியதாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ரீப்பர் கட்டை என்று சொல்லியுள்ளேன். நான் என்னையும், எனது சகோதரர் ராஜேந்திரனையும் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அடித்ததாக மிகைப்படுத்தி கூறிவிட்டேன் என்று புகார் வாக்குமூலத்தில் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் ஆம் படித்துக்காண்பித்தார்கள். ஆனால் நான் மிகைப்படுத்தி இரண்டு நபர்கள் அடித்ததாக கூறியுள்ளதை ெ பாருத்து

எதுவும் படித்து காண்பித்தார்களா என்றால் என்னிடம் படித்து காண்பிக்கும்போது அந்த வார்த்தை வரவில்லை.

6) மேற்படி சம்பவ நாளான இரவு 7.30 மணிக்குப்பிறகு என்னை போலீசார் எந்த தருணத்திலும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அசாஆ. 1 ல் உள்ள சங்கதிகள் நான் கொடுத்தது அல்ல என்றாலும், போலீசார் வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது காலதாமதமாக குற்றம் வரவேண்டும் என்பதற்காக மறு நாள் காலை 8.30 மணிக்கு என்னை ஆஸ்பத்திரியில் வைத்து விசாரித்ததாகவும் நான் ஒரு வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதனை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) எனக்கு நான் கூறிய ஒரு காயத்தை தவிர வேறு காயம் எதுவும் இல்லை. இடது கையில் எவ்வித வெளிக்காயமும் இல்லை. எனது அப்பா வீராச்சாமியை போலீசார் விசாரித்தார்களா என்றால் சரிதான். இந்த வழக்கின் முக்கிய துவக்கமே எனது தந்தையை ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் திட்டி அடித்ததுதான் காரணம் என்றால் சரிதான். மேற்படி சமயத்தில் எனது தந்தை நல்ல உடல்நிலையிலும், ஆரோக்கியமாகவும், பேசும் நிலையிலும் இருந்தார்.

8) எனது கொல்லையில் 10 க்கு மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். நல்ல இதமான கத்து அடிக்கும் என்றால் சரிதான். எனது கொல்லை இருக்கும் இடத்தில் போர் கொட்டகை மற்றும் தென்னை மரங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி தென்னை மரத்தில் இருந்து விழுந்த தேங்காய் சம்பந்தமாகதான் இந்த வழக்கின் பிரச்சனை என்றால் சரிதான்.

9) மேற்படி கொட்டகை ஓரத்திலேயே 3 அடி துாரத்தில் தென்னை மரம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கொட்டகை ஓரத்தில் இந்த வழக்கின் சம்பவம் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் தார் ரோட்டில் நடந்தது. மேற்படி தார் ரோடு கொட்டகையில் இருந்து மேற்கே 15 அடியிலிருந்து 20 அடிக்குள் தார் ரோடு உள்ளது. அந்த தார் ரோடு வடக்கு தெற்காக செல்கிறது என்றால் சரிதான். அந்த வடக்கு தெற்காக செல்கிற ரோட்டுக்கும் மேல்புறத்தில் கருணாநிதி என்பவர் மாடிவீடும், கீழ்புறத்தில் கோவிந்தராஜ் என்பவர் வீ டும் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

*ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் , நீதிமன்ற வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது குறுக்கீடுகள் செய்து மேற்படி வழக்கு விசாரணை குந்தகம் விளைவிக்கும் சூழ்நிலையில் இருப்பதால் இந்நீதிமன்றம் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரை பரிசோதனைக்காக நீதியின் நலன் கருதி மருத்துவரிடம் அனுப்பி வைக்கிறது. மேற்படி மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் வழக்கின் அடுத்த நடவடிக்கை தொடரும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.*

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**மன்னார்குடி.**